1994 மே 5

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சில பிரிவுகளில் பணியாளர்கள் நிரப்பப்படாது காலியாக இருப்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைப் பொறுத்தவரையிலும் எல்லாப் பிரிவுகளிலும் பணியாளர்கள் நிரப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள எல்லாப் பணியாளர்களும் நிரப்பப்பட்டிருப்பதாகக்கூறியிருக்கிறார்கள். மிகவும் நன்றி. ஆனால், இந்தக் கேள்வி கேட்டதற்கு முன்பு இந்த டி.டி.பி.ஓ. அதாவது பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட அலுவலகப் பிரிவு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு உள்ளே தான் இருக்கிறது. அதற்கு பல தடவை சென்றபொழுது அதில் பல ஆட்கள் இல்லாமல் இருந்தார்கள். அங்கு விசாரித்த உடனே, ஆட்கள் இதுவரை போடவில்லை என்று அப்படித்தான் எனக்குப் பதில் கிடைத்தது. ஆகையினால் தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஆகையினால் இந்த வேலை நேரங்களில் அலுவலகங்களிலே அந்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உட்கார வேண்டுமென்று நிர்பந்தமான உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைப் பொறுத்தவரையிலும் அந்த அலுவலகத்தில் பொதுப் பிரிவு, வளர்ச்சிப் பிரிவு மற்றும் பேரூராட்சிப் பிரிவு என்று 3 பிரிவுகள் இருக்கின்றன. அதிலே, பொதுப் பிரிவைப் பொறுத்தவரைக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆட்சித் தலைவர் 2 பேர், நேர்முக உதவியாளர் வட்டாட்சியர் 2 பேர். துணை வட்டாட்சியர் 5 பேர், கணக்கர் ஒருத்தர், கண்காணிப்பாளர் ஒருத்தர், உதவியாளர்கள் 14, சுருக்கெழுத்தர் 2, இளநிலை உதவியாளர் 20, இவர்கள் அவ்வளவு பேரும் இருக்கிறார்கள். பொதுப் பிரிவில் காலியே இல்லை. வளர்ச்சிப் பிரிவில் நேர்முக உதவியாளர், கூடுதல் நேர்முக உதவியாளர், அலுவலக மேலாளர், தலைமை உதவியாளர், நிர்வாக அலுவலர் உதவியாளர், 13, இளநிலை உதவியாளர் 3, தட்டச்சர் 6, சுருக்கெழுத்தர் 2, இந்தப் பணியிடங்களில் எல்லாமும் போடப்பட்டிருக்கிறது. இரண்டு இடம் மட்டும் காலியாக இருக்கிறது. அந்த இரண்டு இடங்கள் இப்பொழுது மாற்றம் செய்யப்பட்டு வருகிறபொழுது விரைவிலே பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல பேரூராட்சிப் பிரிவைப் பொறுத்த வரையிலும் எல்லா அலுவலர்களும் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மே 5]

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. ஆனால் பேரூராட்சியைப் பொறுத்தவரையில், மாவட்ட அளவிலே அதிகாரிகள் இருந்தபோதிலும்கூட, பஞ்சாயத்துக் களில் உண்மையிலேயே நிரப்பப்படவில்லை. பஞ்சாயத்துக்களில் அலுவலர்கள், கிளார்க்குகள் இல்லாத குறை ரொம்ப இருக்கிறது. ஆகையால் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவில்லை. ஆகவே, பஞ்சாயத்துக்களில், டவுன் பஞ்சாயத்துக்களில் எல்லாம் உண்மையிலே நிரப்பப்படாமல் இருக்கிறது. அதை கூடிய சீக்கிரம் அமைச்சர் அவர்கள் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சரை நான் கேட்கிற பொழுது அவர்கள் எல்லா இடங்களும் நிரப்பப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அங்கே, இங்கே ஏதாவது நிரப்பப் படாமல் இருந்தால் இப்பொழுது பணியாளர்களை மாற்றம் செய்வது இந்தக் காலம். ஆதலால் சில தினங்களுக்குள் எல்லா இடங்களும் நிரப்பப்படும் என்பதை அவர் மூலமாக நான் உங் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 522, திரு. எஸ். எம். துரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

522—

திண்டுக்கல் அரசு மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட ஆலோசனைக் குழு அமைத்தல்.

*21255—திரு. எஸ். எம். துரை :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனை சிறப் பாகச் செயல்படுவதற்கு ஆலோசனைக் குழு அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

[1994 மே 5

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் ஆலோசனைக் குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனை ஒரு மாவட்ட மருத்துவமனை. அது ஒரு முக்கியமான மருத்துவ மனையாகும். பெருகிவரும் மக்கள்தொகை காரணமாக, ஏழை எளிய மக்கள் அதிகமானவர்கள் மருத்துவ சிகிச்சைக்கு அங்கே வருகிறார்கள். எனவே பொது மக்களின் பிரச்சினைகளையும் குறைகளையும் தீர்க்க இது போன்ற ஆலோசனைக் குழு அவசிய மாகிறது. இந்தக் குழுவில் யார் யார் உறுப்பினர்களாக இருக் கிறார்கள்? சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் மேலும் 14 பேர் உறுப்பினர்களாக உள்ள— மொத்தம் 15 பேர்கள் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப் பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே இடம் பெறவில்லை. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டு மல்லாமல், நான்-அபிசியல் என்ற வகையிலே சில பேரை அதில் சேர்க்க வேண்டுமென்று இப்போது ஆய்வு நடந்து கொண்டிருக் கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த ஆய்வு முழுமையாக முடிந்த பிறகு, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். எம். துரை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்கப்படும் இக்குழுக் கூட்டம் நடைபெறு வதற்கு செயல்முறை ஏதேனும் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்கப்படுகிற குழு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கூட வேண்டும். கூடி, அந்த மருத்துவ மனையிலே என்ன குறைபாடு இருக்கிறது, என்ன முன்னேற்றம் செய்ய வேண்டும், வருகிற நோயாளிகளுக்கு என்ன வசதிகளைக் கூடுதலாகச் செய்து கொடுக்க முடியும் என்பதை எல்லாம் ஆய்வு செய்வதோடு, தொடர்ந்து, அது செய்யப்பட்டிருக்கிறதா என்று